பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

தினப்புயல்
PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்



T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 01

# விண்வெளியில் பிறந்தநாள் கொண்டாடிய வீராங்கனை



விண்வெளி ரசிகர்களை வியக்க வைக்கும் அளவுக்கு ஒரு சுவாரஸ்ய சம்பவம் ஒன்று தொடர்பிலான தகவலை நாசா வெளியிட்டுள்ளது. அதாவது சர்வதேச விண்வெளி நிலையத்தில் (ISS) தற்போது இருக்கும் விண்வெளி வீரர் மேகன் மெக் ஆர்தரின் என்பவர் தனது பிறந்தநாளை விண்வெளியில் கொண்டாடியுள்ளார் என்பதுதான் அது.

இந்த பிறந்த நாள் கொண்டாட்டங்களின் சில படங்களை அவர் பகிர்ந்துள்ளார். இது தொடர்பில் மேகன் மெக் ஆர்தருக்கு தனது ட்விட்டர் பக்கத்தில். "எனது Expedition 65 குழு நண்பர்களுடன் சிறப்பான பிறந்தநாள் டின்னர்! என் ஸ்பேஸ் பிரதர்சுடன் பிறந்தநாள் நன்றாக சென்றது.

ம் டின்னர் பார்ட்டியில். சீஸ் கொண்ட க்வெஸாடில்லாஸ் மற்றும் டார்ட்டில்லா-பீஸ்ஸாக்கள்! குக்கீ டெகரேட்டிங்! "மெழுகுவர்த்திகள்" கொண்ட சொக்லேட் கேக்! ஆகியவை உள்ளன. நாங்கள் இன்னும் ஐஸ்கிரீம் பேக்கை திறக்கவில்லை. அதனால் 2 வது பார்ட்டி இருக்கிறது என்று அர்த்தம்." என கேப்ஷன் செய்துள்ளார். இந்த பதிவு பகிரப்படத்தில் இருந்து பல்லாயிரக்கணக்கான லைக்ஸ் மற்றும் வியூஸ்களை பெற்றுள்ளது. அத்துடன். ட்விட்டர் யூசர்கள் பலர் எண்ணற்ற கமெண்ட்டுகளை பதிவிட்டு வருகின்றனர். இந்நிலையில். விண்வெளி வீராங்கனையின் பிறந்தநாள் போட்டோக்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

# குறுந்தகவல் மூலம் கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட. கொவிட் நோயாளர்களை நோயின் தன்மைக்கு ஏற்ப வகைப்படுத்தி தேவைப்பாட்டின் அடிப்படையில் வைத்தியசாலையில் அனுப்பதற்கான 1904 குறுந்தகவல் சேவை வேலைத்திட்டமானது இன்று (02) முதல் தென் மாகாணத்திலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கொரோனா நோயாளர்களின் நோய் தன்மைக்கு ஏற்ப அவர்களை வகைப்படுத்தி சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்புதல் மற்றும் வீடுகளில் வைத்து முகாமை செய்தல் ஆகியவற்றுக்காக கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தினால் மேல் மாகாணத்தில் கடந்த ஆகஸ்ட் 19 ஆம் திகதி முதல் இந்த குறுந்தகவல் சேவை அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய நோயாளிகள் கீழ்வரும் தகவல்களை உள்ளீடு செய்து 1904 என்ற இலக்கத்துக்கு குறுந்தகவல் அனுப்பி வைக்க முடியும்.

கொவிட் தொற்றுக்கு உள்ளாகி சுவாசக் கோளாறுகளை கொண்டுள்ள நோயாளர்கள் A எனவும். காய்ச்சல் கொண்டுள்ள நோயாளர்கள் B எனவும். எவ்வித நோய் அறிகுறிகளும் கொண்டிராத நபர்கள் C எனவும் குறிப்பிட்டு (இடைவெளி) வயது (இடைவெளி) தேசிய அடையாள அட்டை எண் (இடைவெளி) முகவரி என்பவற்றை உள்ளீடு செய்து மேற்கண்ட இலக்கத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. குறுந்தகவல் ஊடாக கிடைக்கப்பெறும் தகவல்களுக்கு அமைய கொவிட் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம். நோயாளர்களை சிகிச்சை மையங்களுக்கு அனுப்புவது தொடர்பில் மருத்துவர்களுக்கு அறிவிக்கும்.

இரண்டு தடவைகள் கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டவர்களுக்கும் கொவிட்-19 தொற்று உறுதியாகக்கூடும் என சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். அத்துடன் முன்னதாக கொவிட்-19 தொற்று உறுதியானவர்களுக்கும் மீள கொவிட்-19 தொற்று உறுதியாகக் கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கொவிட்-19 தொற்று உறுதியானவர்கள் குறிப்பிட்ட காலம் சென்றதன் பின்னர் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டில் தற்போது 224 மத்திய நிலையங்களில் 38,825 நோயாளர்களுக்கான படுக்கைகள் உள்ளன. அவற்றில் 31,788 படுக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதுதவிர தீவிர சிகிச்சை பிரிவில் 100 படுக்கைகள் உபயோகிக்கப்படுவதாகவும் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

## தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீக்கப்பட்டால் பொதுப்போக்குவரத்து



தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர் பொது போக்குவரத்து சேவைகளை முன்னர் காணப்பட்ட வகையில் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை நீடித்தாலும் மாகாணங்களுக்கு உட்பட்டு பேருந்து சேவைகள் முன்னெடுக்கப்படும். எவ்வாறாயினும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நீடித்தால் பொதுப்போக்குவரத்து சேவைகள் இடம்பெறமாட்டாதென இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டுள்ளார்.

## மும்பை: சர்வதேச பயணிகளுக்கான விதிமுறைகளில் மாற்றம்



C.1.2 என்ற புதிய கொரோனா வைரஸ் திரிபு வெளிநாடுகளில் கண்டறியப்பட்டதை அடுத்து, மும்பை விமான நிலையத்திற்கு வரும் சர்வதேச பயணிகளுக்கான விதிமுறைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மும்பை மாநகராட்சி அமைப்பு இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இங்கிலாந்து, ஐரோப்பா, மத்திய கிழக்கு, தென்னாபிரிக்கா, பிரேஸில், பங்களாதேஷ், பொஸ்த்வானா, சீனா, மொரிஸியஸ், நியூஸிலாந்து மற்றும் ஸிம்பாப்வே முதலான நாடுகளில் இருந்து வரும் பயணிகள், தங்களது சொந்த செலவில் விமான நிலையத்தில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் முதன்முதலாக கண்டறியப்பட்ட அதிக வீரியம் மிக்க C.1.2 கொரோனா திரிபு, கொங்கோ, மொரிஸியஸ், போர்த்துக்கல், நியூஸிலாந்து மற்றும் சுவிட்சர்லாந்து முதலான நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் திரிபு, இதுவரையில் இந்தியாவில் அடையாளம் காணப்படவில்லை என அரசாங்கத் தகவல்களை மேற்கோள்காட்டி இந்திய ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

## நாட்டின் அமெரிக்க டொலர் கையிருப்பு பெறுமதி அதிகரிப்பு

இலங்கையில் அமெரிக்க டொலர்களின் கையிருப்பு 937 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் தனது உறுப்பு நாடுகளுக்கு பணமாக மாற்றக்கூடிய S.D.R எனப்படும் விசேட மீள்செலுத்துதல் உரிமைகளின்படி, நிதியுதவி வழங்கியதன் மூலம் இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு வலுவடைந்துள்ளது. இதன் மூலம், இலங்கையினால் பெறப்பட்ட 787 மில்லியன் அமெரிக்க டொலர்களும், பங்களாதேஷ் மத்திய வங்கியுடனான பணப் பரிமாற்ற ஒப்பந்தங்களின் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்டதற்கு இணங்க பெறப்பட்ட 150 மில்லியன் அமெரிக்க டொலர்களும் தற்போது இலங்கை பொருளாதாரத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தில் தற்போதுள்ள ஒதுக்கீடுகளுக்கு ஏற்ப 650 பில்லியன் அமெரிக்க டொலர்களை அதன் உறுப்பு நாடுகளுக்கு வழங்க முடிவு செய்திருந்தது. இதன் மூலம் இலங்கை 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற தகுதி பெற்றிருந்தது. இதில், இலங்கை தற்போதுவரை 787 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுள்ளது.

கொவிட் தொற்று காரணமாக பல நாடுகள் பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளமை இனங்காணப்பட்டதையடுத்து, சர்வதேச நாணய நிதியத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன் அல்ல என்றும் இதற்காக எந்த நிபந்தனைகளும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியம் இதற்கு முன்னதாக 2009, 1979 - 81 மற்றும் 1970 - 72 ஆம் அதன் உறுப்பு நாடுகளுக்கு SDR இருப்புக்களை வழங்கியது.




## இலங்கைக்கு மேலும் 12 மில்லியன் கொவிட் தடுப்பூசிகள்

**எதிர்வரும் 2 மாதங்களுக்குள் இலங்கைக்கு மேலும் 12 மில்லியன் கொவிட் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளதாக அரச மருந்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.**

**8 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் மற்றும் 4 மில்லியன் பைசர் தடுப்பூசிகளே இவ்வாறு கிடைக்கவுள்ளதாக விஷேட வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.**

**இதுவரையில் இலங்கைக்கு 22 மில்லியன் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.**

# குற்றம் சுமத்தும் பைடன்



அமெரிக்க முன்னாள் அதிபர் ட்ரம்ப் தலிபான்களுடன் போட்ட தவறான ஒப்பந்தமே ஆப்கானின் தற்போதைய குழப்பங்களுக்கு காரணம் என அதிபர் பைடன் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ் தானிலிருந்து அமெரிக்க படைகள் வெளியேறிய விவகாரத்தில் அதிபர் பைடன் மீது கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் வெள்ளை மாளிகையிலிருந்து அவர் நாட்டு மக்க ளுக்கு உரையாற்றினார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து படைகளை விலக்கிக்கொள்ளும் முடிவு மிகவும் சரியானது என மனதார நம்புவதாகவும் இது அறிவுபூர்வமான முடிவு, அமெரிக்க நலன் காக்கும் முடிவு என்றும் பைடன் உருக்கமாக தெரிவித்தார். அத்துடன் ட்ரம்ப் அதிபராக இருந்த போது தலிபான்களுடன் போட்ட தவறான ஒப்பந்தமே தற்போதைய குழப்பங்களுக்கு காரணமாகிவிட்டது என்றும் பைடன் சாடினார்.

ஆப்கானிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 5 ஆயிரம் தலிபான்களை விடுவிக்க ட்ரம்ப் ஒப்புக்கொண்டதாகவும் இதன் விளைவாகவே அவர்கள் வேகமாக எழுச்சி பெற முடிந்ததாக வும் பைடன் குறிப்பிட்டார். மேலும் ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளாக நடத்தி வந்த போர் முடிவுக்கு வந்துவிட்டாலும் ரஷ்யா, சீனா போன்ற நாடுகளின் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அதிபர் பைடன் தெரிவித்தார்.

# யானைப் பசிக்கு சோளப்பொறி



அதிபர் ஆசிரியர்களின் சம்பள தீர்வு யானைப் பசிக்கு சோளப் பொறி போன்றதாகும் என ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலா ளர் எஸ்.பாலசேகரம் தெரிவித்தார். இன்று (02) திகதி தலாவாக்கலையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், அதிபர் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தீர்க்கப்பட்டு உள்ளதாக அமைச்சரவை அறிவித்துள்ளது. இது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றே. காரணம் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை ஆனது கடந்த 24 வருட காலமாக இடம்பெற்று வந்த ஒன்று. அவ்வாறான ஒரு சூழ்நிலையில் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையை தீர்ப்பதற்காக அரசாங்கத்தினால் சுபோதினி ஆணைக்குழு முன்வைக்கப் பட்டது. இந்த ஆணைக்குழு மூலம் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை முழுமையாக தீர்க்கப்படாதுவிட்டாலும் நாட்டின் நிலைமையினை கருத்தில் கொண்டு அதை ஓரளவு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதனால் தொழிற் சங்கங்கள் அந்த ஆணைக்குழுவின் சம்பளத்தையாவது பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையிலேயே அமைச்சரவை உப குழு அதனை நடைமுறைப் படுத்துவதாக தொழிற்சங்கங்களிடம் உத்தரவாதம் அளித்தது. ஆனால் இன்று சிபார்சு செய்யப்பட்ட சம்பவமானது சுபோதினி ஆணைக்குழுவில் பரிந்துரைக்கப்பட்ட ஒரு பகுதியை. அதனையும் நான்காக பிரித்து நான்கு வருடங்களாக தருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எங்களால் இதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் கேட்பது சம்பள உயர்வு அல்ல சம்பள முரன்பாட்டினை தீர்க்குமாறே நாங்கள் கேட்கிறோம். எனவேதான் இந்த ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையை முழுமையாக தீர்க்கப்படாத நிலை ஏற்படுகிறது. தனியார் மயப்படுத்தப்பட்டால் இந்த நாட்டில் வாழும் ஏழை எளிய குடும்பங்கள் பாரிய பாதிப்புக்களை எதிர்நோக்கும். ஆகவே இந்தத் துறை பாதுகாக்கப்பட வேண்டுமானால் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதே எமது இந்த போராட்டம் ஆகும். இன்று மாணவர்கள் மாத்திரமன்றி ஆசிரியர்களும் மன உளைச்சலுக்கு உள்ளாகி யுள்ளனர். அதுமாத்திரமன்றி பெற்றோர்களும் தங்களது பிள்ளைகளுக்கு கல்வியை பெற்றுக்கொள்ள முடியாது பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எனவே இது குறித்து ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சர் கவனத்திலெடுத்து தற்போது சிபார்சு செய்யப்பட்ட குறைந்த தொகையாவது முழுமையாகக் கிடைக்கச்செய்ய வேண்டும் என்பதே எமது கோரிக்கையா கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ரொனால்டோவின் புதிய உலக சாதனை

ஆடவர் சர்வதேச கால்பந்து போட்டிகளில், அதிக கோல்களைப் பெற்றவர் என்ற உலக சாதனையை போர்த்துக்கல் அணி வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ தனதாக்கியுள்ளார். அயர் லாந்து அணியுடன் நேற்று இடம்பெற்ற உலகக் கிண்ண தகுதி காண் போட்டியில், 2 க்கு 1 என்ற கோல் அடிப்படையில் போர்த் துக்கல் அணி வெற்றி பெற்றது. 36 வயதான ரொனால்டோ, இந்தப் போட்டியில் இரண்டு கோல்களை தலையால் அடித்து, தமது 110 மற்றும் 111 ஆவது கோல்களைப் பதிவுசெய்தார்.

ஈரானின் முன்னாள் வீரரான அலி டையி, 1993 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையில், 109 கோல்களைப் பெற்று, ஆடவர் சர்வதேச கால்பந்து போட்டிகளில் அதிக கோல்களைப் பெற்றவர் என்ற சாதனையை நிகழ்த்தியிருந்தார். இந்த சாத னையை 2020 யூரோ கிண்ணப் போட்டியில், ரொனால்டோ சமன் செய்திருந்தார். இந்த நிலையில், மேலும் இரண்டு கோல்களை பதிவு செய்ததன் மூலம், அந்த சாதனையை முறி யடித்து, ஆடவர் சர்வதேச கால்பந்து போட்டிகளில் அதிக கோல்களைப் பெற்றவர் என்ற புதிய உலக சாதனையை கிறிஸ்டியானோ ரொனால்டோ நிகழ்த்தியுள்ளார்.



# இந்தியாவில் பரவும் புதிய வகை வைரஸ்

இந்தியாவின் உத்தரபிரதேசத்தில் ஸ்க்ரப் டைபஸ் என்ற புதிய வகை வைரஸ் தொற்று பரவி வருகிறது. கடந்த ஆண்டு சீனாவில் இருந்து உலக நாடுகளுக்குப் பரவிய கொரோனாவால் பல கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் கொரோனா இரண்டாம் அலைப்பரவல் அதிகரித்து வரும் நிலையில் விரைவில் கொரோனா மூன்றாம் அலை பரவ வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையே 3 ஆம் அலை தீவிரமடையும் என ஐஐடி கான்பூர் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் உத்தர பிரதேசம், அசாம் ஆகிய மாநிலங்களில் Scrub Typhus என்ற புதிய வைரஸ் பரவி வருகிறது. இதனால், நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இது நாடு முழுவதும் பரவிடுமோ என்ற அச்சம் உருவாகியுள்ளதுடன் . இத்தொற்று ஓரியண்டினா சுட்சுகாமுஷி எனும் பக்டீரியால் ஏற்படுகிறது எனவும், இந்த வகை சிகர்ஸ் (லார்வா ) பூச்சிகள் மனிதர்களைக் கடிக்கும்போது, தொற்று மனிதர்களுக்குப் பரவுவதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீடிக்கப்படுமா?




தற்போது நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை தொடர்ந்தும் நீடிப்பதா, இல்லையா என்பது தொடர்பில் நாளை (03) தீர்மானிக்கப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. COVID-19 ஒழிப்பிற்கான ஜனாதிபதி செயலணி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவின் தலைமையில் நாளை கூடவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன குறிப்பிட்டார். இதன்போது, தனிமைப்படுத்தல் ஊரடங்கை நீடிப்பதா, இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என அவர் கூறினார்.

இதேவேளை, தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர், விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே கோரியுள்ளார். இது தமது தனிப்பட்ட கருத்து எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூகத்தில் கொரோனா தொற்று பரவுதல் மற்றும் நோயாளர்களின் அதிகரிப்பில் எவ்வித வீழ்ச்சியும் ஏற்படாமையால் ஊரடங்கை நீடிக்க வேண்டும் என தாம் கருதுவதாகவும் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே கூறியுள்ளார்.

நாளாந்தம் சுமார் 5000 வரையில் நோயாளர்கள் அறிக்கையிடப்பட்டாலும், சுமார் 50,000 நோயாளர்கள் சமூகத்தில் இருக்கக்கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதனால், குறைந்தபட்சம் மேலும் இரண்டு வாரங்களுக்கு பயணக்கட்டுப்பாடுகளை விதிக்கும் பட்சத்தில், கொரோனா தொற்று பரவுவதை ஓரளவுக்கு குறைத்துக்கொள்ள முடியும் என இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே சுட்டிக்காட்டியுள்ளார்.

## அத்தியாவசிய சேவைகள் - வர்த்தமானி வெளியீடு

துறைமுகங்கள் அதிகார சபை நிறைவேற்ற வேண்டிய அனைத்து சேவைகள், பெட்ரோலிய உற்பத்தி, திரவ வாயு உள்ளிட்ட அனைத்து எரிபொருள் விநியோகம், ரயில்வே திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையால் முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து பொது போக்குவரத்து சேவைகள், பொது சேவைகளை நடத்திச் செல்வதற்கு தேவையான பராமரிப்பு மற்றும் நடவடிக்கை பிரிவுகள் ஆகியன அத்தியாவசிய சேவைகளாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளன.

அனைத்து மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், விவசாய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட களப்பணியில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் சேவைகளும் அத்தியாவசிய சேவைகளுக்குள் அடங்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி உள்ளிட்ட அனைத்து அரச வங்கிகள், காப்புறுதி சேவைகள், சுகாதார சேவையுடன் தொடர்புடைய அனைத்து சேவைகள், சதொச மற்றும் கூட்டுறவு துறைகளுடன் தொடர்புடைய சேவைகளையும் ஜனாதிபதி அத்தியாவசிய சேவைகளாக வர்த்தமானியில் அறிவித்துள்ளார்.

இதனைத் தவிர, மாகாண சபைகளின் கீழ் இயங்கும் அரச அலுவலகங்களால் நிறைவேற்றப்படுகின்ற சேவைகள் மற்றும் தபால் சேவையும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

